برے خاتمے کے اسباب

# கெட்ட முடிவுக்கான காரணங்கள்

(Tamil)

ஷெய்கே தரீகத், அமீரே அஹ்லுஸ் ஸுன்னத்,
தஃவதே இஸ்லாமியின் ஸ்தாபகர், ஹழ்ரத்,
அல்லாமா, மௌலானா அபூ பிலால்

**முஹம்மத் இல்யாஸ்**

அத்தார் காதிரீ ரளவீ

بُرے خَاتمے کے اَسباب

# கெட்ட முடிவுக்கான காரணங்கள்

இந்த சிறு நூல் ஷேகே தரீகத், அமீரே அஹ்லுஸ் ஸுன்னத், த.்.வதே இஸ்லாமியின் ஸ்தாபகர், ஹழ்ரத், அல்லாமா, மௌலானா **முஹம்மத் இல்யாஸ் அத்தார் காதிரி ரzஸவி** دَامَتۡ بَرَکَاتُہُمُ الۡعَالِیَہ அவர்களால் உருது மொழியில் எழுதப்பட்டதாகும். மொழி பெயர்ப்பு மஜ்லிஸ் தமிழ் மொழியில் மொழி பெயர்த்துள்ளது. இதன் மொழி பெயர்ப்பிலோ அல்லது அச்சுக் கோவையிலோ ஏதாவது தவறுகள் தென்பட்டால் பின்வரும் முகவரியில் அமைந்துள்ள மொழி பெயர்ப்பு மஜ்லிஸோடு தொடர்பு கொண்டு நற்கூலியைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

**குறிப்பு** :- இதில் வரும் ஷரீஆ சட்டங்கள் யாவும் ஹன.்.பி மத்ஹபின் படியே எழுதப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**Translated into Tamil by: Translation Majlis (Dawat-e-Islami)**
Alami Madani Markaz, Faizan-e-Madina, Mahalla Saudagran,
Purani Sabzi Mandi, Baab-ul-Madina, Karachi, Pakistan
**Contact #:** +92-21-34921389 to 91
**Email:** translation@dawateislami.net

اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ وَ الصَّلٰوۃُ وَالسَّلَامُ عَلٰی سَیِّدِ الۡمُرۡسَلِیۡنَ

اَمَّا بَعۡدُ فَاَعُوۡذُ بِاللّٰہِ مِنَ الشَّیۡطٰنِ الرَّجِیۡمِ ؕ بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ؕ

# புத்தகம் வாசிக்கும்போது ஓதும் துஆ

இஸ்லாமிய புத்தகங்களையோ அல்லது பாடங்களையோ வாசிக்கும் போது பின்வரும் துஆவை ஓதிக்கொள்ளவும். اِنۡ شَآءَاللّٰہ عَزَّوَجَلَّ, வாசிப்பவைகள் ஞாபகத்தில் இருக்கும்.

اَللّٰهُمَّ افْتَحْ عَلَيْنَا حِكْمَتَكَ وَانْشُرْ

عَلَيْنَا رَحْمَتَكَ يَا ذَاالْجَلَالِ وَالْاِكْرَام

யா அல்லாஹ் عَزَّوَجَلَّ! அறிவு ஞானத்தின் வாயிலை நமக்காக திறந்து விடுவாயாக. மேலும் நமக்கு ரஹ்மத்துடைய கதவுகளை திறந்து விடுவாயாக கண்ணியமும், உயர்வும் உடையவனே!

(المستطرف ج ١ ص ٤٠ دارالفکر بیروت)

(ஆரம்பத்திலும், கடைசியிலும் ஒரு தடவை ஸலவாத் ஓதிக்கொள்ளவும்.)



www.dawateislami.net

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِیْنَ وَالصَّلٰوةُ وَالسَّلَامُ عَلٰی سَیِّدِ الْمُرْسَلِیْنَ

اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّیْطٰنِ الرَّجِیْمِ ؕ بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِیْمِ ؕ

# கெட்ட முடிவுக்கான காரணங்கள்*

ஷைத்தான் உங்களுக்கு எவ்வளவுதான் சோம்பேறித் தனத்தை உண்டு பண்ணினாலும் அமீரே அஹ்லுஸ் ஸுன்னத் دَامَتْ بَرَكَاتُهُمُ الْعَالِيَه அவர்களின் இந்த சிறுநூலை முழுமையாக படியுங்கள். இன்ஷா அல்லாஹ் عَزَّوَجَلَّ நீங்கள் உங்களுடைய உள்ளத்தில் மதனி மாற்றங்கள் உருவாகுவதை உணர்வீர்கள்.

## ஸலவாத் ஓதாததன் விபரீதம்

அறிவிக்கப்பட்டுள்ளது: மரணித்த ஒருவர் மஜூஸிகள் (நெருப்பு வணங்கிகள்) அணியும் தொப்பியை தன் தலையில் அணிந்துக் கொண்டிருப்பதை ஒரு மனிதர் கனவிலே கண்டு, அதற்கான காரணத்தைக் கேட்டார். மரணித்தவர் பதிலளித்தார், "பரிசுத்த மாநபி صَلَّى اللّٰهُ تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்களின் அருள் மிகுந்த திருநாமத்தை கேட்கும்போது, நான் ஸலவாத் கூறவில்லை. இந்தப் பாவத்தின் காரணமாக என்னிடமிருந்து ஈமானையும், மஃ.ரிபத்தையும் பறிக்கப்பட்டு விட்டது. (ஸப்அ ஸனாபில், பக்கம் 35, மக்தபா நூரிய்யா ரஸவிய்யா, ஸக்கர்)

صَلُّوْا عَلَى الْحَبِيْب　　صَلَّى اللّٰهُ تَعَالٰى عَلٰى مُحَمَّد

---

* (இந்த சொற்பொழிவு ஹிஜ்ரி 1419 ரபீஉல் ஆகிர் பிறை 23 இல், சார்ஜாவிலிருந்து தஃவதே இஸ்லாமியின் உலகளாவிய மதனி மர்கஸ், பாபுல் மதீனா, கராச்சியில் நடைபெற்ற வாராந்த இஜ்திமாவில் ஒலிபரப்பப்பட்டது.அவசியமான ஒரு சில மாற்றங்களோடு எழுத்து வடிவில் இங்கே தரப்படுகிறது.)



www.dawateislami.net

## கனவுகளைக் கொண்டு யாரையும் கா.'.பிர் என கூறிவிட முடியாது

இனிய இஸ்லாமிய சகோதரர்களே! பாவங்களின் முடிவு எவ்வளவு பயங்கரமானது என்பதைப் பார்த்தீர்களா? பாவங்களை செய்து வந்த காரணத்தால் ஒருவர் அவரது மரண வேளையில் ஈமானை இழந்துவிடும் ஆபத்து ஏற்படுகிறது. மனதில் பதித்துக்கொள்ள வேண்டிய முக்கியமான விடயம் என்னவென்றால், ஒரு மனிதரைப் பற்றி கெட்ட கனவு காண்பதென்பது கவனத்திற்கு எடுக்கப்பட வேண்டிய விடயமாக இருந்தாலும், நபியல்லாதவரின் கனவு ஷரீஅத்தில் ஒரு ஆதாரமல்ல. கனவை அடிப்படையாக வைத்துக் கொண்டு எந்த ஒரு முஸ்லிமையும் கா.'.பிர் என்று கூறிவிட முடியாது. மரணித்த ஒரு முஸ்லிமை கு.'.ப்ருடைய அடையாளங்களோடு ஒருவர் கனவில் கண்டால் அல்லது மரணித்த ஒரு முஸ்லிம், ஒருவரின் கனவில் தான் ஈமானை இழந்துவிட்டேன் என்று கூறினாலும் கூட, அவரை கா.'.பிர் என பிரகடணப்படுத்த முடியாது.

## ஸலவாத்துக்குப் பதிலாக ص என்று எழுதுவதற்கு அனுமதி இல்லை

ஸத்ருஷ்ஷரீஆ, பத்ருத்தரீகா, ஹழ்ரத் அல்லாமா மௌலானா மு.'.ப்தி முஹம்மத் அம்ஜத் அலி அ.'.zஸமி رَحْمَةُ اللهِ تَعَالٰی عَلَيْه அவர்கள் கூறியுள்ளார்கள், “தன் வாழ்நாளில் ஒரு முறையாவது ஸலவாத் ஓதுவது பர்ளாகும். ஒரு கூட்டத்தில் மாநபி صَلَّى اللهُ تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்களின் அருள்மிகு திருநாமத்தைத் கூறும்போதோ அல்லது வேறொருவர் கூறக் கேட்கும்போதோ ஸலவாத் ஓதுவது வாஜிபாகும்.” ஒரு கூட்டத்தில் நூறு முறை பெயரைக் கேட்டாலும், ஒவ்வொரு முறையும் ஸலவாத் ஓத வேண்டும். யாருக்காவது பரிசுத்த திருநாமத்தை கூறும்போதோ அல்லது கூறக்கேட்கும் போதோ அச்சந்தர்ப்பத்தில் ஸலவாத் ஓதக்

கிடைக்காமல் போய் விட்டால், வேறொரு நேரத்தில் ஓதிக் கொள்ள வேண்டும். ஒருவர் பரிசுத்த மாநபி صَلَّى اللّٰه تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்களின் அருள் மிகுந்த திருநாமத்தை எழுதும்போது ஸலவாத்தை கட்டாயம் எழுத வேண்டும், சில மார்க்க அறிஞர்களின் கருத்துப்படி அன்னவர்களின் திருநாமத்தோடு சேர்த்து ஸலவாத்தை எழுதுவது வாஜிபாகும். இக்காலத்தில் ஸலவாத்தை எழுதும் போது அதிகமானவர்கள், صلعم, عم, ص, م அல்லது (ஸல்) என்று எழுதி விடுகிறார்கள். இது கூடாததும், கடுமையான ஹறாமுமாகும். இதேபோல் சிலர், رَضِیَ اللّٰه تَعَالٰى عَنْهُ என்பதற்குப் பதிலாக رض என்றும் رَحْمَةُ اللّٰهِ تَعَالٰى عَلَيْه என்பதற்குப் பதிலாக رح என்றும் எழுதுகிறார்கள், இதுவும் சரியல்ல. (பஹாரே ஷரீஅத், பாகம்3, பக்கம் 102-103, மக்தபதுல் மதீனா, பாபுல் மதீனா, கராச்சி) அல்லாஹ் عَزَّوَجَلَّ வின் பரிசுத்த திருநாமத்தை எழுதும் போது அதனோடு சேர்த்து ج என்று மாத்திரம் எழுதி விடாதீர்கள். عَزَّوَجَلَّ என்றோ அல்லது جَلَّ جَلَالُهٗ என்றோ முழுமையாக எழுதுங்கள்.

சதா என் நாவினில் ஸலவாத்தும் ஸலாமும் இருக்க
வீண் பேச்சினை எனதில் அகற்றுவாயாக

## சலுகையின் பலனை அடைந்துக் கொள்ளுங்கள்

இனிய இஸ்லாமிய சகோதரர்களே! மேற்கூறப்பட்ட விடயத்தில் கண்மணி நாயகம் صَلَّى اللّٰه تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்களின் திருநாமத்தை கேட்டு ஸலவாத் கூறாத மனிதனின் இறுதி முடிவைப்பற்றிய பயங்கரமான ஒரு கனவை கேட்டோம். எனவே நாம் அல்லாஹ் عَزَّوَجَلَّ வின் தேவையற்ற தன்மை மீதும், அவனது மறைவான திட்டத்தைப் பற்றியும் மிகக் கவனமாக இருக்க வேண்டும். மேலும் ஸலவாத் கூறுவதில் பொடுபோக்காக இருக்கக்கூடாது. சென்ற காலத்தில், சங்கையான திருநாமத்தை கூறும் போது

அல்லது பிறர் கூறக்கேட்கும் போது ஸலவாத் ஓதாமல் இருந்திருக்கலாம். அப்படியானால், அந்த நேரத்தில் நாம் ஸலவாத் கூறாததற்குப் பதிலாக பின்னால் கூறிக் கொள்ளலாம் என்ற சலுகை இருக்கின்றது. எனவே இப்பொழுது கூறிக் கொள்ளுங்கள். இதற்குப் பிறகு அதே நேரத்தில் ஸலவாத் ஓத முயற்சி செய்யுங்கள். அப்படி கிடைக்காவிட்டால் பிறகு கூறிக்கொள்ள வேண்டும்.

கியாமத்தில் அவனுக்கு நலமே!
ஓதினால் எவன் உல்லார நான்கு ஸலாம்

صَلُّوْا عَلَى الْحَبِيْب صَلَّى اللّٰهُ تَعَالٰى عَلٰى مُحَمَّد

## கெட்ட முடிவுக்கு நான்கு காரணங்கள்

ஷரஹுஸ் ஸுதூரில் கெட்ட முடிவுக்கு நான்கு காரணங்கள் இருப்பதாக சில உலமாக்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

1. தொழுகையை நிறைவேற்றுவதில் சோம்பேறித்தனம்
2. மதுபானம் அருந்துதல்
3. பெற்றோருக்கு கீழ்படியாமை
4. முஸ்லிம்களுக்கு தீங்கு செய்தல்

(ஷரஹுஸ் ஸுதூர், பக்கம் 27, தாருல் குதுபுல் இல்மிய்யா, பேரூத்)

எந்த இஸ்லாமிய சகோதரர்கள் தொழாமல் இருக்கின்றார்களோ, அல்லது (குறிப்பிட்ட நேரத்திற்குத் தொழாமல்) கழா செய்கின் றார்களோ, ஃபஜ்ர் தொழுகைக்கு எழாமல் இருக்கின்றார்களோ அல்லது மார்க்க அனுமதியின்றி தொழுகையை ஜமாஅத்துடன்



www.dawateislami.net

மஸ்ஜிதில் நிறைவேற்றாமல் வீட்டில் நிறைவேற்றுகின்றார்களோ அத்தகையவர்கள் சிந்திக்க வேண்டிய நேரமாகும். தொழுகையில் சோம்பேறித்தனம் காட்டுவது கெட்ட முடிவுக்கு காரணமாகி விடக்கூடாது. இதேபோன்று மதுபானம் அருந்துபவர்கள், பெற்றோருக்குக் கீழ்படியாது நடப்பவர்கள் மேலும் முஸ்லிம்களுக்கு தம் நாவாலோ அல்லது கைகளாலோ தீமை விளைவிப்பவர்கள் உண்மையான உள்ளத்தோடு தௌபா செய்துக் கொள்ள வேண்டும். மௌலானா ஸய்யித் முஹம்மத் நஈமுத்தீன் முராதாபாதி رَحْمَةُ اللهِ تَعَالٰى عَلَيْه அவர்கள் அறிவிக்கின்றார்கள், உண்மையான தௌபா என்னவென்றால், رُجُوْعٌ اِلَى اللهِ (அல்லாஹ் عَزَّوَجَلَّ வின் பக்கம் மீள்வதாகும்)

பாவமன்னிப்புக்கு மூன்று தூண்கள் உள்ளன:

(1) பாவத்தை ஏற்றுக் கொள்ளல் (2) வெட்கப்படல்

(3) இதற்குப் பிறகு இப்பாவத்தை செய்ய மாட்டேன் என உறுதிக்கொள்ளல்

அந்தப் பாவம் பிரதியீடு செய்ய வேண்டிய பாவமாக இருப்பின் பிரதியீடு செய்வதும் அவசியமாகும். உதாரணமாக, ஒருவர் தொழாமல் இருந்தால், அவரின் தௌபாவிற்காக அனைத்து தொழுகைகளையும் கழா செய்வதும் அவசியமாகும். (கஸாஇனுல் இர்ஃபான், பக்கம் 12, பம்பாய்) ஒருவர் மற்றொருவரின் உரிமைகளைப் மீறியிருந்தால் தௌபா செய்வதோடு அவ்வுரிமைகளைப் பூர்த்தி செய்வதும் அவசியமாகும். உதாரணமாக, பெற்றோர்கள், சகோதர சகோதரிகள், மனைவி, நண்பர் அல்லது வேறொருவரின் உள்ளத்தை நோவினை செய்திருந்தால், அவர்கள் மன்னிக்கும் விதமாக



www.dawateislami.net

நாம் மன்னிப்புக் கேட்க வேண்டும். மாறாக சிரித்துக்கொண்டே "SORRY" என்று சொல்லி விடுவது எல்லா விடயத்திலும் பொருந்தாது.

**ந.ஃ.ப்ஸே! இதுவென்ன அநியாயம் சதா புத்தம் புதியதோர் குற்றம்**
**பலஹீன இவன் மீது இத்துனை பாரச் சுமையா !!!**

## தரித்திரம் ஏற்படுத்திய மூன்று குறைகளின் சம்பவம்

மின்ஹாஜுல் ஆபிதீனில் கூறப்பட்டுள்ளது: ஸய்யிதுனா ஃபுழைல் பின் இயாழ் رضی اللہ تعالیٰ عنہ அவர்கள் தனது மாணவர் ஒருவரின் மரணத் தருவாயில் வருகை தந்து, மாணவரின் அருகிலிருந்து சூரா யாஸீனை ஓத ஆரம்பித்தார்கள். ஆனால், அந்த மாணவர் **"சூரா யாஸீன் ஓதுவதை நிறுத்துங்கள்"** என்று கூறினார். அதன் பிறகு ஃபுழைல் பின் இயாழ் رضی اللہ تعالیٰ عنہ அவர்கள் கலிமாவை ஓதுவதற்காக தல்கீன் செய்தார்கள். **(தல்கீனின் சரியான முறை என்னவென்றால், மரணத்தருவாயில் இருப்பவருக்கு கலிமாவை ஓதுமாறு வற்புறுத்தாமல், அவருக்கு பக்கமாக நின்று சத்தமாக கலிமாவை கூறிக்கொண்டே இருக்க வேண்டும். ஏனெனில் அவருக்கும் கலிமா ஞாபகம் வருவதற்காக)** ஆனால் அவரோ நான் ஒரு போதும் இந்த கலிமாவை கூற மாட்டேன், இது எனக்குத் தேவையும் இல்லை. என்று பதிலளித்தார். இந்த வார்த்தைகளைக் கூறிக்கொண்டே அவர் மரணித்து விட்டார். தனது மாணவனின் இந்த துக்க கரமான முடிவால் பெரும் துயரமடைந்த ஸய்யிதுனா ஃபுழைல் பின் இயாழ் رضی اللہ تعالیٰ عنہ அவர்கள் நாற்பது நாட்கள் தனது வீட்டில் அழுத வண்ணம் இருந்தார்கள். நாற்பது நாட்களுக்குப் பிறகு, அவர்கள் ஒரு கனவு கண்டார்கள். அதில் மலக்குமார்கள் அவர்களுடைய மாணவரை நரகிலே இழுத்துச் சென்றுக் கொண்டிருந்தார்கள்.

அவர்கள் மாணவரிடம், என் மாணவர்களிடையே நீர் மிக உயர்ந்த அந்தஸ்தை பெற்றவராக இருந்தீர், என்ன காரணத்தினால் அல்லாஹ் عَزَّوَجَلَّ உன்னிடமிருந்து ம.்.ரிபத்தை (ஞான அறிவு) பறித்து விட்டான்? என்று கேட்டார்கள். மாணவர் பதிலளித்தார்: “மூன்று குறைகளின் காரணத்தினால்: (1) **கோள்,** நான் எனது நண்பர்களிடம் ஒன்றைச் சொல்வேன், தங்களிடம் வந்து வேறொன்றைச் சொல்வேன். (2) **பொறாமை,** நான் என் நண்பர்கள் மீது பொறாமைக் கொண்டிருந்தேன். (3) **மது அருந்தல்,** ஒரு நோயைக் குணப்படுத்துவதற்காக வைத்தியரின் ஆலோசனைப்படி வருடத்திற்கு ஒருமுறை ஒரு கிலாஸ் மது அருந்தி வந்தேன்.” (மின்ஹாஜுல் ஆபிதீன், பக்கம் 165)

இனிய இஸ்லாமிய சகோதரர்களே! அல்லாஹ் عَزَّوَجَلَّ வை பயந்துக் கொள்ளுங்கள், அவனுடைய திருப்பொருத்தத்தை பெற்றுக் கொள்வதற்காக அவனது சந்நிதானத்தில் வீழ்ந்திருங்கள். கைசேதம்! அல்லாஹ்வுடைய ஒரு மாபெரும் இறைநேசரின் மாணவர் கோள், பொறாமை, மது அருந்தல் காரணமாக கு.்.ப்ருடைய வார்த்தைகளைக் கூறி மரணித்து விட்டார். சத்துருஷ்ஷரீஆ, பத்துருத்தரீகா, ஹழ்ரத், அல்லாமா மு.்.ப்தி முஹம்மத் அம்ஜத் அலி அ.்.zஸமி رَحْمَةُ اللهِ تَعَالٰى عَلَيْه அவர்கள் அறிவிக்கின்றார்கள், مَعَاذَ اللّٰه (அல்லாஹ் عَزَّوَجَلَّ பாதுகாக்க வேண்டும்) மரணவேளையின் போது ஒருவருடைய நாவினால் கு.்.ப்ருடைய வார்த்தைகள் வெளியானால் அவருக்கு கு.்.ப்ருடைய சட்டம் வழங்கப்பட மாட்டாது. ஏனெனில் மரண வேதனையின் துன்பங்களால் அவர் தன் அறிவை இழந்த நிலையில் இருந்திருக்கலாம் அல்லது மயக்க நிலையில் இவ்வார்த்தைகளை அவர் கூறி இருக்கலாம். (பஹாரே ஷரீஅத், பாகம் 4, பக்கம் 158, மக்தபதுல் மதீனா, பாபுல் மதீனா கராச்சி- துர்ரெ முக்தார், பாகம் 3, பக்கம் 96, தாருல் ம.்.ரிபா, பேரூத்)

## மறுமையில் நாயின் உருவம்

கவலைக்குரிய விடயம் என்னவெனில், இன்றைய காலத்தில் கோள் மூட்டுதல் சர்வ சாதாரணமாகப் போய்விட்டது. அநேகமானவர்களுக்கு இத்தீய செயலைச் செய்யும் போது அதைப் பற்றிய உணர்வும் இருப்பதில்லை. கோள் சொல்லுதல் மறுமை நாளில் மாபெரும் அழிவை உண்டாக்கக் கூடியது. அகிலத்தின் அதிபதி, அண்ணல் நபி صَلَّى اللّٰهُ تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்கள் நவின்றுள்ளார்கள், "புறம், மனிதர்களை இகழ்பவர்கள், கோள் சொல்பவர்கள் மேலும் எக்காரணமுமின்றி மனிதர்களின் குறைகளை தேடுபவர்களை அல்லாஹ் عَزَّوَجَلَّ (கியாம நாளில்) நாயின் உருவத்தில் எழுப்புவான்." (அத்தர்ஹீப் வத்தர்ஹீப், பாகம் 3, பக்கம் 325, தாருல் குதுபுல் இல்மிய்யா, பேரூத்) இன்னுமொரு ஹதீஸில் அறிவிக்கப்பட்டுள்ளது: கோள் சொல்பவன் சுவர்க்கம் நுழைய மாட்டான். (ஸஹீஹுல் புகாரி, பாகம் 4, பக்கம் 115. ஹதீஸ் 6056, தாருல் குதுபுல் இல்மிய்யா, பேரூத்)

## கோளின் வரைவிலக்கணம்

**முஹ்லிகாத்** அதாவது பேரழிவுக்குக் கொண்டு செல்லும் பாவங்களை விட்டும் விலகிக் கொள்வது மிக அவசியமாகும். அவற்றை விட்டும் விலகிக் கொள்வதற்கு அப்பாவங்களைப் பற்றிய அறிவைப் பெற்றுக் கொள்வதும் அவசியமாகும். இங்கே **கோளின் வரைவிலக்கணம்** தரப்படுகிறது: அல்லாமா அய்னி رَحْمَةُ اللّٰهِ تَعَالٰى عَلَيْه அவர்கள் இமாம் நவவி رَحْمَةُ اللّٰهِ تَعَالٰى عَلَيْه அவர்கள் மூலம் அறியத்தருகிறார்கள், "தீங்கு விளைவிக்கும் நோக்கத்தோடு ஒருவர் கூறியதை இன்னொருவரிடம் கூறுவதே கோள் மூட்டலாகும்." (உம்ததுல் காரி, ஹதீஸ் 216, பாகம் 2, பக்கம் 594, தாருல் ஃபிக்ர், பேரூத்)

صَلُّوْا عَلَى الْحَبِيْب　　صَلَّى اللّٰهُ تَعَالٰى عَلٰى مُحَمَّد

## கோள் மூட்டலை விட்டும் நாம் விலகிக் கொள்கிறோமா?

கவலைக்குரிய விடயம் என்னவெனில், இக்காலத்தில் அதிகமான மக்களின் உரையாடலில் கோள் மூட்டி விடுவதும், புறம் பேசுவதுமே அடங்கியிருக்கிறது. நண்பர்களின் வட்டமாகட்டும், சன்மார்க்கம் தொடர்பான ஒரு கூட்டத்தின் பின்னராகட்டும், திருமண, மரண சடங்குகளாகட்டும், ஒருவருக்கொருவரின் சந்திப்பின் போதாகட்டும், அல்லது ஒருவருக்கொரருவர் தொலைபேசியில் உரையாடும் போதாகட்டும், அதிகமானவர்கள் வழமையாகவே கோள் மூட்டுவதிலும் புறம் பேசுவதிலுமே ஈடுபட்டவர்களாக காணப்படுகிறார்கள். மார்க்க அறிவுள்ள, நல்ல உணர்வுள்ள ஒருவர், இரண்டு மனிதர்களுடைய உரையாடலை ஆராய்ந்துப் பார்த்தாரேயானால், டசன் (dozen) கணக்கில் கோள் மூட்டல்களையும் மேலதிகமாக எத்தனையோ பாவமான சொற்களையும் அடையாளம் கண்டுக் கொள்ளலாம்.

பரிதாபமே! எங்களுக்கு என்ன நடக்கப் போகிறது!!! மீண்டும் ஒருமுறை இந்த ஹதீஸின் மீது சிந்தனை செலுத்துங்கள்: “கோள் சொல்பவன் சுவர்க்கம் நுழைய மாட்டான்.” ஆஹ்! நமக்கு உண்மையான முறையில் நாவின் மதனி பூட்டு நஸீபாகி விட வேண்டும்! **(அதாவது தேவையற்ற பேச்சுக்களை விட்டும் நாவை பேணுவதை த.்.வதே இஸ்லாமியின் மதனி சூழலில் நாவின் மதனி பூட்டு என்று சொல்லப்படும்)** தேவையான பேச்சுக்களைத் தவிர நாவிலிருந்து வேறெதுவும் வெளியாகி விடக்கூடாது! அதிகமாக பேசுபவர்கள் இன்னும் உலக நண்பர்களின் கூட்டத்துடன் இருப்பவர்கள் புறம் பேசுவதை விட்டும் மேலும் குறிப்பாக கோள் மூட்டுவதை விட்டும் தவிர்ந்திருப்பது மிகவும் கடினமான விடயமாகும். ஆஹ்! ஆஹ்! ஆஹ்! ஹதீஸ் ஷரீ.்.பில் வருகிறது: “எவருடைய பேச்சு அதிகமாகின்றதோ அவருடைய தவறுகளும் அதிகமாகின்றன, எவருடைய தவறுகள் அதிகமாகின்றதோ அவருடைய பாவங்கள் அதிகரிக்கின்றன, மேலும் எவருடைய பாவம் அதிகரிக்கின்றதோ அவர் நரகத்திற்கு மிகவும் தகுதி



www.dawateislami.net

வாய்ந்தவராவார்.” (ஹில்யதுல் அவ்லியா, பாகம் 3, பக்கம் 87 - 88, எண் 3278, தாருல் குதுபுல் இல்மிய்யா, பேரூத்) கண்மணி நாயகம், ரஸூலே அக்ரம் صَلَّى اللّٰه تَعَالٰی عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்கள் நவின்றுள்ளார்கள், “மேலதிக பேச்சை நிறுத்துபவருக்கும், செல்வத்தில் மேலதிகமானவற்றைச் செலவிடுபவருக்கும் நற்செய்தியே உள்ளது.” (அல் மு.ஃ.ஜமுல் கபீர் லித் தப்ரானி, பாகம் 5, பக்கம் 71 - 72, தார் இஹ்யாஉத் துராஸில் அரபி, பேரூத்) ஒரு ஸஹாபி رَضِيَ اللّٰه تَعَالٰی عَنْهُ அவர்கள் அறிவிக்கிறார்கள், “சில நேரங்களில் யாராவது எனக்கு ஏதாவதொன்றைக் கூறுவார். அவருக்கு பதில் சொல்வது எனக்கு எந்தளவு விருப்பமென்றால், தாகத்தோடு இருக்கும் ஒரு மனிதனுக்கு குளிர்ந்த நீர் கிடைப்பதை விட மிக விருப்பமாக இருக்கும். என்றாலும், அது தேவையற்ற பேச்சாகப் போய் விடுமோ என்ற பயத்தினால் நான் பதில் சொல்வதைத் தவிர்த்துக் கொள்வேன். (இத்திஹாபுஸ் ஸாததில் முத்தகீன், பாகம் 9, பக்கம் 159, தாருல் குதுபுல் இல்மிய்யா, பேரூத்) இனிய இஸ்லாமிய சகோதரர்களே! அந்த நாயகத் தோழர் رَضِيَ اللّٰه تَعَالٰی عَنْهُ அவர்கள் அனுமதிக்கப்பட்ட பேச்சுக்களையும் கூட வீண்பேச்சாகி விடுமோ என்ற பயத்தில் விலகி இருந்தார்கள். நாங்களோ தேவையற்ற பேச்சுக்களிலும், புறம் பேசுவதிலும், கோள் மூட்டுவதிலும், மற்றவர்களில் குறை காண்பதிலும், பொய்யான பழிகளை சுமத்துவதிலும் ஈடுபட்டுள்ளோம். கைசேதமே! எங்களுக்கு என்ன நடக்கும்!!! யா அல்லாஹ் عَزَّوَجَلَّ! நமக்கு நல்ல புத்தியை தருவாயாக, மேலும் பாவமான பேச்சுக்களிலிருந்து விலகாத நமக்கு உண்மையான முறையில் நாவை பேணி நடப்பதற்கு கிருபை செய்வாயாக.

اٰمِيْن بِجَاهِ النَّبِيِّ الْاَمِيْن صَلَّى اللّٰه تَعَالٰی عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم

இனிய இஸ்லாமிய சகோதரர்களே! மேற்கூறப்பட்ட சம்பவத்தில் பொறாமையின் விபரீதம் பற்றியும் கூறப்பட்டுள்ளது. கவலை என்னவென்றால், பொறாமை எனும் நோயும் அதிகமாக பரவி விட்டது. ஒரு ஹதீஸில் கூறப்பட்டுள்ளது: “நெருப்பு விறகை சாப்பிடுவது போல் நற்செயல்களை பொறாமை சாப்பிட்டு விடும்.” (ஸுனன் இப்னு மாஜா, பாகம் 4, பக்கம் 473, ஹதீஸ் 4210, தாருல் ம:்ரிபா, பேருத்)

## பொறாமையின் வரைவிலக்கணம்

பொறாமைக்கொள்பவர் “ஹாசித்” என்றும், மற்றவரால் பொறாமைக் கொள்ளப்படுபவர் “மஹ்சூத்” என்றும் அழைக்கப் படுவார். லிஸானுல் அரப், பாகம் 3, பக்கம் 166 இல் பொறாமையின் வரைவிலக்கணம் இவ்வாறு கூறப்பட்டுள்ளது,

اَلْحَسَدُ اَن تَتَمَنّٰى زَوَالَ نِعْمَةِ الْمَحْسُوْدِ اِلَيْكَ

“ஹசத் என்றால் மஹ்சூதிடம் உள்ள நி:்மத்துக்கள் நீங்கி அது உனக்கு கிடைக்க வேண்டுமென நீ மேலெண்ணம் வைப்பதாகும்.”

## இலகுவான வார்த்தைகளில் பொறாமை என்பதன் சுருக்கம்

இனிய இஸ்லாமிய சகோதரர்களே! மேற்கூறப்பட்ட வரைவிலக்கணம் எதை குறிப்பிடுகிறதென்றால், ஒருவரின் நற்பேறுகள் இல்லாதொழிந்து, அதே நற்பேறுகள் தனக்கு கிடைத்து விட வேண்டுமென நினைப்பதாகும். உதாரணமாக, பிரபல்யமான அல்லது மற்றவர்களால் மதிக்கப்படுகின்ற ஒரு நபர் மீது வெறுப்பின் காரணமாக, அவர் அவமானப்பட வேண்டும், அதற்குப் பதிலாக தான் பிரபல்யமடைய

வேண்டுமென ஒருவர் விரும்புவாரேயானால், இந்த ஆசையே பொறாமையாகும். இது போலவே, குறிப்பிட்ட நபர் ஏழையாகி விடவேண்டும், அதற்குப் பதிலாக தான் செல்வந்தனாக ஆகிவிட வேண்டுமென ஒருவர் எண்ணுவாரேயானால் அதுவே பொறாமையாகும். (அல்லாஹ் பாதுகாக்க வேண்டும்) இந்த நோய் மிகவும் பரவி விட்டது. அதாவது இக்காலத்தில் மற்றவர்களின் வர்த்தகத்தில் நஷ்டத்தை ஏற்படுத்துவதற்கு எத்தனையோ முயற்சிகள் மேற் கொள்ளப்படுகின்றன. ஒருவரின் பொருட்களில் குறைகளை வெளிப்படுத்தி அந்த கடைக்காரர் மீது வீண்பழிகளை சுமத்து கிறார்கள். பொறாமையின் காரணத்தினால், பொய் பேசுகிறார் கள், புறம் பேசுகிறார்கள், கோள் சொல்கிறார்கள், அவமானப் படுத்துகிறார்கள் மேலும் இப்படி எத்தனையோ பாவங்களை செய்கிறார்கள். பரிதாபம் என்னவெனில்! அநேகமான முஸ்லிம்கள் இன்று இஸ்லாமிய சகோதரத்துவ உணர்வையே இழந்து விட்டார்கள். நம் முன்னோர்கள் எவ்வளவு நேர்மையான முஸ்லிம்களாக இருந்தார்கள் என்பதை இந்த சம்பவத்தின் மூலம் உணர்ந்துக் கொள்ளலாம்.

## ஸய்யிதி குதுபே மதீனாவின் சம்பவம்

அ.்.லா ஹழ்ரத் அவர்களின் கலீபா, ஸய்யிதுனா, மௌலானா zஸியாஉத்தீன் அஹ்மத் காதிரி ரzஸவி குதுபே மதீனா رَحْمَةُ اللهِ تَعَالٰى عَلَيْه அவர்கள் துருக்கியர்களின் ஆட்சிக் காலத்திலிலேயே மதீனாவில் குடியமர்ந்து விட்டார்கள். அங்கே அவர்கள் கிட்டத்தட்ட 77 வருடங்கள் வாழ்ந்தார்கள். அவர்களின் அருள் மிகுந்த மண்ணறை ஜன்னதுல் பகீயில் அமைந்துள்ளது. ஒருமுறை ஒருவர், குதுபே மதீனா رَحْمَةُ اللهِ تَعَالٰى عَلَيْه அவர்களிடம், யா ஸய்யிதி! அக்காலத்தில் (துருக்கிய காலத்தில்) மதீனவாசிகள் எப்படி வாழ்ந்தார்கள்? என்று கேட்டார். அவர்கள் رَحْمَةُ اللهِ تَعَالٰى عَلَيْه பதில்

கூறினார்கள், “ஒரு செல்வந்தரான ஹாஜி ஏழைகளுக்குப் பங்கிடுவதற்காக பெருந்தொகையான துணிகளை வாங்குவதற்கு ஒரு துணி கடைக்குச் சென்று, குறிப்பிட்ட வகையான துணிகளை கேட்டார், அப்போது அந்த கடைக்காரர் அவரிடம்: நீங்கள் கேட்கின்ற அனைத்து வகையான துணிகளும் என்னிடம் இருக்கிறன. ஆனால் உங்களிடம் நான் வேண்டிக்கொள்வது என்னவென்றால், இந்தத் துணிகளை பக்கத்து கடையில் வாங்கிக் கொள்ளுங்கள். ஏனெனில் اَلْحَمْدُ لِلّٰه عَزَّوَجَلَّ எனக்கு இன்று நல்ல வியாபாரம் நடந்தது. ஆனால் பக்கத்து கடையில் இன்று சிறிதளவு வியாபாரமே நடந்துள்ளது” என்று கூறினார்.

அதன் பிறகு ஹழ்ரத் குதுபே மதீனா رَحْمَةُ اللهِ تَعَالٰى عَلَيْه அவர்கள் கூறினார்கள், அக்காலத்தில் மதீனவாசிகள் இப்படித்தான் இருந்தார்கள்.

அல்லாஹ் عَزَّوَجَلَّ உடைய பேரருள் அவர்கள் மீது பொழியட்டும், அவர்களின் பொருட்டால் நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்படட்டும்.

நெஞ்சினில் மண்ணாசையை அகற்றிடு
இந்நாசத்திலிருந்து தலைவா கறை சேர்த்திடு
என்னை உன் நேசனாக ஆக்கிவிடு
யாநபி தாஜ்தாரே மதீனா

## தாடி இல்லாத இளைஞரை விரும்பிய முஅத்தின் இருவரின் அழிவு

ஸய்யிதுனா அப்துல்லாஹ் பின் அஹ்மத் முஅத்தின் رَحْمَةُ اللهِ تَعَالٰى عَلَيْه அவர்கள் கூறுகிறார்கள்: நான் கஃபாவை தவாப் செய்வதில் ஈடுபட்டுக்கொண்டிருந்த போது என் பார்வை ஒரு மனிதரின்

மீது பட்டது. அவர் க.்.பாவின் திரையை பிடித்துக்கொண்டு “யா அல்லாஹ்! عَزَّوَجَلَّ என்னை ஒரு முஸ்லிமாக இந்த உலகை விட்டும் மரணிக்கச் செய்வாயாக” என்ற துஆவை திரும்பத் திரும்ப கேட்டுக்கொண்டிருந்தார், நான் அவரிடம், ஏன் நீங்கள் இதைத் தவிர வேறு எந்த துஆக்களையும் கேட்காமல் இருக்கிறீர்கள்? என்று வினவியபோது, அவர் பதில் கூறினார், எனக்கு இரண்டு சகோதரர்கள் இருந்தார்கள். எனது மூத்த சகோதரர் சம்பளம் எதுவும் வாங்காமல் 40 வருடங்கள் ஒரு மஸ்ஜிதில் அதான் சொன்னார், அவரது மரணத்தருவாயில் திருக்குர்ஆனைத் தன்னிடம் தரும்படி கூறினார். எனவே நாம் அதன் மூலம் அவர் பரகத் பெருவார் என்ற நம்பிக்கையோடு குர்ஆனை கொடுத்தோம், ஆனால் குர்ஆனைப் பிடித்துக் கொண்டு அவர் கூறினார்: “நான் குர்ஆன் கூறும் அத்தனை நம்பிக்கைகளையும், கட்டளைகளையும் நிராகரிக்கிறேன் என்பதற்கு நீங்கள் அத்தனை பேரும் சாட்சியாக இருங்கள், மேலும் நான் கிறிஸ்தவ மதத்தை தேர்ந்தெடுக்கிறேன்.” எனக் கூறி மரணித்து விட்டார்.

என்னுடைய இன்னுமொரு சகோதரரும் ஒரு மஸ்ஜிதில் சம்பளம் இல்லாமல் 30 வருடங்கள் அதான் கூறினார். ஆனால் அவரும் கடைசியில் கிறிஸ்தவராக மரணித்தார். ஆகவே நான் என்னுடைய முடிவைப் பற்றி மிக்க கவலைக் கொண்டவனாக, எல்லா நேரமும் நல்ல (ஈமானோடு) மரணத்திற்கு துஆ கேட்டுக் கொண்டே இருக்கிறேன். ஹழ்ரத் ஸய்யிதுனா அப்துல்லாஹ் பின் அஹ்மத் முஅத்தின் رَحْمَةُ اللهِ تَعَالٰى عَلَيْه அவர்கள், அப்படி என்ன பயங்கரமான பாவங்களை உனது சகோதரர்கள் செய்து வந்தார்கள்? என்று கேட்டார்கள்? அந்த மனிதர் பதில் அளித்தார், அவர்கள் அந்நியப் பெண்கள் மீது மோகம் கொண்டவர்களாகவும், தாடி முளைக்காத சிறுவர்களை (இச்சையோடு) பார்ப்பவர்களாகவும் இருந்தார்கள். (அர்ரௌழுல் .்.பாஇக், பக்கம் 17, தாருல் குதுபுல் இல்மிய்யா, பேரூத்)



www.dawateislami.net

## உறவினர் மீது உறவினரின் பர்தா (முகத்திரை)

இனிய இஸ்லாமிய சகோதரர்களே! என்ன விபரீதம்! இனிமேலும் அந்நியப் பெண்களை பார்ப்பதையும், அந்நியப் பெண்களோடு முறையற்றுப் பேசிக் கொண்டிருப்பதையும் கைவிட மாட்டோமா? இனிமேலும் அந்நியப் பெண்களை விட்டும் அதாவது மைத்துனி, தாய்வழி தந்தை வழி மாமா மாரின் மனைவியர் உட்பட அந்நியப் பெண்களைப் பார்ப்பதை விட்டும் தவிர்ந்துக் கொள்ள மாட்டோமா? (ஷரீஅத்தின் பிரகாரம் இவர்கள் அனைவரும் அந்நியப் பெண்களாகும்) இதே விதமாக, தாய் வழி தந்தைவழி பெற்றோரோடு பிறந்தவர்களும் ஒருவருக்கொருவர் பர்தாவைப் பேண வேண்டும். கணவருடன் பிறந்தவர்களும், மனைவியுடன் பிறந்தவர்களும் பர்தாவைப் பேண வேண்டும். அந்நிய ஷேகும் அவரது பெண் முரீதீன்களும் ஒருவருக்கொருவர் பர்தாவைப்பேண வேண்டும். ஒரு பெண் முரீத் அவரது அந்நிய ஷேகின் கையை முத்தமிட முடியாது.

## ஓர் அம்ரதை இச்சையோடு பார்ப்பது ஹராமாகும்

கவனத்தில் கொள்ளுங்கள்! ஓர் அம்ரத் (தாடி முளைக்காத சிறுவர்) நெருப்பைப் போன்றவராகும்! அவரோடுள்ள நெருக்கம், நட்பு, கேலிக்கிண்டல், அவரை மகிழ்வூட்டுவது, அவரைப் பிடித்துக் கொள்வது, கட்டிப் பிடிப்பது மேலும் அவரில் தொங்கிக் கொள்வது போன்ற செயல்கள் எல்லாமே ஒருவனை நரகிற்கு இட்டுச்செல்ல முடியும். அவரில் எவ்வித தவறும் இல்லாவிட்டாலும் கூட அவரை விட்டும் விலகி இருப்பதே பாதுகாப்பானது. அவர் அம்ரதாக இருப்பதால் அவர் மனதை நோவினை செய்யாதீர்கள். மாறாக, அவரை விட்டும் தூர விலகி இருப்பது மிகவும் அவசியமாகும். மோட்டார் சைக்கிலில் அவருக்குப் பின்னால் நீங்களும் அமர வேண்டாம், அவரையும் உங்கள் பின்னால் அமர வைக்க வேண்டாம். ஏனெனில்

நெருப்பு முன்னால் இருந்தாலும், பின்னால் இருந்தாலும் அதன் சூடு தாவிப் பிடிக்கக் கூடியது. இச்சை இல்லா விட்டாலும் அம்ரதை கட்டிப்பிடிப்பது ஃபித்னாவை உண்டாக்கி விடும். மேலும் இச்சையுடன் அவரைக்கட்டிப் பிடிப்பது, அவரோடு கைக்குழுக்குவது, மாறாக ஃபிக்ஹுடைய சில அறிஞர்களின் கருத்துப்படி **அம்ரதை இச்சையோடு பார்ப்பதும் கூட ஹறாமாகும்.** (த.ஃப்ஸீராதே அஹ்மதிய்யா, பக்கம் 559, பிஷாவர்) மேலும் அவருடைய உடல், உடை போன்றதை விட்டும் பார்வையை தாழ்த்திக்கொள்ள வேண்டும். அவரைப் பற்றி சிந்திப்பதால், அவரின் எழுத்துக்களைப் பார்ப்பதால், அல்லது ஏதாவதொன்றை பார்ப்பதால் ஆசை ஏற்படுமேயானால், அவருடன் தொடர்ப்புடைய அனைத்து விடயங்களை விட்டும் கண்களை பாதுகாத்துக் கொள்ளுங்கள். அவருடைய வீட்டையும் பார்க்க வேண்டாம், அவருடைய தந்தை அல்லது சகோதரரை பார்ப்பதால் அவருடைய ஞாபகமும், ஆசையும் ஏற்படுமேயானால் அவர்களையும் பார்க்க வேண்டாம்.

## அம்ரதோடு எழுபது ஷைத்தான்

அம்ரதின் மூலமாக ஷைத்தான் புரியும் பயங்கர தாக்குதலைத் தெளிவுபடுத்தும் முகமாக அஃலா ஹழ்ரத் رَحْمَةُ اللهِ تَعَالٰی عَلَيْه அவர்கள் கூறியுள்ளார்கள்: ஒரு பெண்ணோடு இரண்டு ஷைத்தான்கள் இருக்கின்றன மேலும் ஒரு அம்ரதோடு எழுபது ஷைத்தான்கள் இருக்கின்றன. (ஃபதாவா ரஸவிய்யா, பாகம் 23, பக்கம் 721) எனவே தான் அந்நிய (திருமணம் செய்ய ஆகுமான) பெண்கள் இன்னும் அம்ரதை விட்டும் தன்னையும், தனது பார்வையையும் தூரமாக்குவது மிகவும் அவசியமாகும். ஏனெனில் வெளிப்படையில் நல்லவர்களைப்போல் இருந்த இரண்டு சகோதரர்களுடைய பரிதாபகரமான மரணத்தைப் பற்றி இப்பொழுது நாம் பார்த்தோம். தயவு செய்து மக்தBபதுல் மதீனாவினால்



www.dawateislami.net

வெளியிடப்பட்ட “**அம்ரத் பஸன்தீ கீ தபாஹ் காரியான்**” என்ற சிறுநூலை வாசியுங்கள்.

**ந.:.ப்ஸோ கட்டுக்கடங்காமல் பாவங்களின் மீது தாவுகிறது**
**தௌபா தௌபா செய்யும் பழக்கமும் இருக்க வேண்டும்**

## ஹஜ்ஜை நிறைவேற்றாமல் இருப்பதும் கெட்ட முடிவுக்கு காரணமாகும்

கண்மணி நாயகம் صَلَّى اللهُ تَعَالٰی عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்கள் கூறினார்கள்: “ஒருவருக்கு ஹஜ் செய்யக்கூடிய வசதி வாய்ப்புக்கள் இருந்தும், அவரை அநியாயம் இழைக்கும் ஆட்சியாளனோ, தடுக்கக்கூடிய நோய்களோ அல்லது இப்படியான தடைகள் எதுவும் இல்லாமல், ஒருவர் ஹஜ் செய்யாமல் மரணித்து விடுவாரேயானால் அவர் யஹூதியாக அல்லது கிறிஸ்தவராக மரணிக்கட்டும். (ஸுனனுத் தாரமி, பாகம் 2, பக்கம் 45, ஹதீஸ் 1785, பாபுல் மதீனா, கராச்சி)

ஒருவர் மீது ஹஜ் கடமையான பிறகு அவர் அதை நிறை வேற்றாமல் மரணிப்பாரேயானால் அவரின் முடிவு மோசமான முறையில் அமைவதற்கு வாய்ப்புள்ளது.

## அதானின் போது பேசுபவரின் முடிவு கெட்டதாக அமையும் அச்சமுள்ளது

.·.பதாவா ரZஸவிய்யாவை மேற்கோள்காட்டி, ஸத்ருஷ் ஷரீஆ, பத்துருத் தரீகா, ஹழ்ரத், அல்லாமா மு.·.ப்தி முஹம்மத் அம்ஜத் அலி அ.·.Zஸமி رَحْمَةُ اللهِ تَعَالٰی عَلَيْه அவர்கள் கூறியுள்ளார்கள்: “யார் அதான் கூறும்போது பேசிக் கொண்டிருக்கிறாரோ مَعَاذَ الله (அல்லாஹ் عَزَّوَجَلَّ பாதுகாக்க வேண்டும்) அவரது முடிவு கெட்டதாக அமையும் அச்சமுள்ளது. (பஹாரே ஷரீஅத், பாகம் 3, பக்கம் 41, மக்தபதுல் மதீனா-பாபுல் மதீனா, கராச்சி)



www.dawateislami.net

## அதானுக்கு பதிலளித்தவர் சுவனவாதி ஆனார்

இனிய இஸ்லாமிய சகோதரர்களே! அதான் ஆரம்பமான உடனே, பேசுவதையும், மற்ற வேலைகளையும் நிறுத்தி விட்டு அதற்குப் பதில் சொல்ல வேண்டும். ஒருவர் மஸ்ஜிதுக்குச் செல்கிறார் அல்லது வுழூ செய்துக் கொண்டிருக்கிறார் என்றால், அவர் அதானுக்கு பதிலளித்துக் கொண்டே அவற்றைத் தொடரலாம். ஒன்றின் பின் ஒன்றாக பல அதான்கள் போய்க் கொண்டிருந்தால் முதல் அதானுக்கு மாத்திரம் பதிலளித்தல் போதுமானதாகும். என்றாலும் அனைத்திற்கும் பதிலளிப்பது சிறந்ததாகும். உண்மையில் அதானுக்கு பதிலளிப்பவர்கள் பெரும் பாக்கியசாலிகள்! தாரீகே திமிஸ்க், பாகம் 40, பக்கம் 412 இல் ஸய்யிதுனா அபூஹுரைரா رَضِیَ اللّٰہُ تَعَالٰی عَنْہُ அவர்களின் அறிவிப்பின்படி கூறப்பட்டுள்ளது: வெளிப்படையில் பெரும் நல்அமல்கள் செய்தவர் என்று அறியப்படாத ஒருவர் இருந்தார். அவர் மரணித்த போது, மாநபி صَلَّی اللّٰہُ تَعَالٰی عَلَیْہِ وَاٰلِہٖ وَسَلَّم அன்னவர்கள் தங்களுடைய அருமை ஸஹாபாக்களிடம் عَلَیْہِمُ الرِّضْوَان, உங்களுக்குத் தெரியுமா அல்லாஹ் عَزَّوَجَلَّ அவரை சுவர்க்கத்தில் நுழையச்செய்து விட்டான் என்று கூறினார்கள். அப்போது அருமை ஸஹாபா பெருமக்கள் عَلَیْہِمُ الرِّضْوَان ஆச்சரியமடைந்தார்கள், ஏனெனில் வெளிப்படையில் அவர் பெரும் நல்அமல்களை செய்ததாக அறியப்பட்டிருக்க வில்லை. பிறகு ஒரு ஸஹாபி رَضِیَ اللّٰہُ تَعَالٰی عَنْہُ அவர்கள் மரணித்தவரின் வீட்டுக்குச் சென்று, அவரது மனைவியிடம் அவரின் குறிப்பிட்ட ஏதாவது நல்அமலைப் பற்றிக் கூறுங்களேன் என வினவிய போது, அவர்கள் பதிலளித்தார்கள், குறிப்பிட்டுச் சொல்ல அப்படி பெரிய அமல் எதுவும் எனக்குத் தெரியாது, ஆனால் பகலோ இரவோ எப்பொழுது அதானைக் கேட்டாலும் அதற்கு பதில் கட்டாயம் கூறுவார்கள் என்பது மட்டும் எனக்குத் தெரியும். (தாரீக் திமிஸ்க் இப்னு அஸாகிர், பாகம் 40, பக்கம் 412-413, முலக்கஸ் தாருல் ஃபிக்ர், பேரூத்) அல்லாஹ் عَزَّوَجَلَّ உடைய பேரருள்



www.dawateislami.net

அவர்கள்மீது பொழியட்டும், அவர்களின் பொருட்டால் நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்படட்டும்.

அதானைப் பற்றியும், அதன் பதிலைப் பற்றியும் விளக்கமாக அறிந்துக் கொள்ள மக்தபதுல் மதீனாவினால் வெளியிடப்பட்ட **அதானின் மகிமை** என்ற சிறுநூலை வாசியுங்கள்.

எழியோனின் பாவத்திற்கு அளவில்லை
அது ஆயிரமாயிரம் இருக்கலாம்
இறைவனே, உன் மன்னிப்பின் அருளுக்கு அளவேது,
எல்லைதான் ஏது?

## நெருப்பு வேகமாக நெருங்குகிறது

ஸய்யிதுனா மாலிக் பின் தீனார் رَحْمَةُ اللهِ تَعَالٰی عَلَيْه அவர்கள், மரணத்தை நெருங்கிக் கொண்டிருந்த ஒரு நேயாளியின் அருகில் சென்று, கலிமா ஷரீ∴பை மொழிய பலமுறை தல்கீன் செய்துக்கொண்டே இருந்தார்கள். ஆனால் அவரோ தொடர்ந்து “பத்து பதினொன்று, பத்து பதினொன்று” என்று கூறிக் கொண்டே இருந்தார்! அவரிடம் ஏன் இப்படித் தொடர்ந்து கூறுகிறீர்கள் என்று கேட்கப்பட்ட போது, நெருப்பு மலை என் முன்னால் இருக்கிறது, நான் கலிமாவை மொழிய முயற்சி செய்யும்போது இந்த நெருப்பு என்னை எரிப்பதற்காக நெருங்குகிறது என்று கூறினார். பின்பு அந்தப் பெரியார் رَحْمَةُ اللهِ تَعَالٰی عَلَيْه அவர்கள் மக்களிடம், துன்யாவில் இவர் என்ன வேலை செய்துக் கொண்டிருந்தார்? என வினவினார்கள்: அப்போது, இவர் வட்டி வாங்குபவராகவும், அளவு நிறுவையில் மோசடி செய்பவராகவும் இருந்தார் என அறிவிக்கப்பட்டது. (தஸ்கிரதுல் அவ்லியா, பக்கம் 52)

صَلُّوْا عَلَی الْحَبِيْب   صَلَّى اللهُ تَعَالٰی عَلٰی مُحَمَّد



www.dawateislami.net

## அளவு, நிறுவையின் மோசடிக்கு தண்டனை

கைசேதமே! வட்டி வாங்குபவர்களுக்கும், அளவு நிறுவையில் மோசடி செய்பவர்களுக்கும் பேரழிவுதான்! சில சில்லறை காசுகளுக்காக தம்மை கொழுந்து விட்டெரியும் நரக நெருப்பில் ஆக்கிக்கொள்ள விரும்புபவர்களே! கவனியுங்கள்! ரூஹுல் பயானில் குறிப்பிடப்பட்டுள்ளது: யார் அளவு நிறுவையில் மோசடி செய்கிறார்களோ, கியாம நாளில் அவரை நரகப்படுகுழியின் ஆழத்திற்கே வீசி எறியப்படும், மேலும் இரு மலைகளுக்கு நடுவே அவரை அமர்த்தப்பட்டு அந்த இரு மலைகளையும் அளக்கும்படியும், நிறுக்கும்படியும் கட்டளையிடப்படும். அவர் அந்த மலைகளை நெருங்கும் போது நெருப்பு அவரை கரித்து விடும். (ரூஹுல் பயான், பாகம் 10, பக்கம் 364, கோயிடா)

## ஒரு ஷேகின் கெட்ட முடிவு

ஸய்யிதுனா ஸுஃப்யான் ஸவ்ரி رَحْمَةُ اللهِ تَعَالٰى عَلَيْه அவர்களும் ஸய்யிதுனா ஷைBபான் ராயி رَحْمَةُ اللهِ تَعَالٰى عَلَيْه அவர்களும் ஓர் இடத்தில் சந்தித்துக் கொண்டார்கள். ஸய்யிதுனா ஸுஃப்யான் ஸவ்ரி رَحْمَةُ اللهِ تَعَالٰى عَلَيْه அவர்கள் முழு இரவும் அழுதுக் கொண்டிருந் தார்கள். ஸய்யிதுனா ஷைBபான் ராயி رَحْمَةُ اللهِ تَعَالٰى عَلَيْه அவர்கள் அழுகைக்கான காரணத்தை அவர்களிடம் வினவியபோது, கெட்ட முடிவின் பயம் என்னை அழ வைக்கிறது, நான் ஒரு ஷேகிடத்திலே 40 வருடங்கள் கல்வி கற்றேன். அவரோ 60 வருட காலம் மஸ்ஜிதுல் ஹராமில் இபாதத் செய்துள்ளார், ஆனால் அவரது முடிவு குஃப்ரில் (இறை நிராகரிப்பில்) அமைந்தது என பதிலளித்தார்கள்: ஸய்யிதுனா ஷைBபான் ராயி رَحْمَةُ اللهِ تَعَالٰى عَلَيْه அவர்கள் கூறினார்கள், ஸுஃப்யானே! அது அவரது பாவங்களுக்குக் கிடைத்த முடிவாகும், நீங்கள் அல்லாஹ் عَزَّوَجَلَّ வுக்கு அடிபணியாமல் ஒரு போதும் இருந்து விடாதீர்கள். (ஸப்அ ஸனாபில், பக்கம் 34, மக்தபா நூரிய்யா ரஸவிய்யா, ஸக்கர்)

## மலக்குகளின் முன்னைய உஸ்தாத்

இனிய இஸ்லாமிய சகோதரர்களே! அல்லாஹ் عَزَّوَجَلَّ தேவையற்றவன். அவனின் மறைவானத் திட்டங்களைப் பற்றி யாரும் அறிய மாட்டார்கள். எனவே யாரும் தனது அறிவைப் பற்றியோ அல்லது வணக்க வழிபாடுகளைப் பற்றியோ பெருமை படக்கூடாது. ஷைத்தான் ஆயிரக்கணக்கான வருடங்கள் வணங்கி வழிப்பட்டு, அவனது அறிவாலும் வணக்கத்தாலும் مُعَلِّمُ الْمَلَكُوْتِ அதாவது மலக்குகளின் உஸ்தாத் ஆனான், ஆனால் அவனது பெருமையால் அழிந்தொழிந்து கா:.பிராகி, இப்போது மக்களை வழிகெடுக்க மும்முரமாக ஈடுபடுகிறான். மேலும் வாழ்நாள் முழுவதும் ஊசாட்டங்களை உண்டாக்கி, மரணத்தருவாயில் இருக்கும் போது ஒருவரது ஈமானைப் போக்கி, வழி கெடுப்பதற்கு தன் சக்தியிலாலான அத்தனை விடயங்களையும் செய்கிறான்.

## பெற்றோரின் வடிவில் ஷைத்தான்

அறிவிக்கப்பட்டுள்ளது: ஒருவர் மரணத்தருவாயில் இருக்கும் போது, இரண்டு ஷைத்தான்கள் அவரின் வலது மற்றும் இடது பக்கத்தில் வந்து அமர்ந்துக் கொள்கின்றன. வலது பக்கத்தி லிருக்கும் ஷைத்தான் அவரது தந்தையின் வடிவிலே வந்து கூறுவான்: **மகனே!** பார், நான் உன் மீது அதிகமாக அன்பு வைத்திருக்கும் உனது தந்தை. நான் உனக்கு அறிவுரைக் கூறுகிறேன், கிறிஸ்தவ மதத்தைத் தழுவிய பிறகே நீ மரணிக்க வேண்டும், ஏனெனில் கிறிஸ்தவ மதமே எல்லா மதங்களிலும் சிறந்த மதமாகும். இடது பக்கத்திலிருக்கும் ஷைத்தான் அவரது தாயின் வடிவிலே வந்து கூறுவான்: **என் அன்பு மகனே!** நான் உன்னை என் கருவறையில் வைத்திருந்தேன், மேலும் எனது பாலை ஊட்டி மடியில் வைத்து கவனித்தேன். என் அருமை மகனே! நான் உனக்கு அறிவுரை கூறுகிறேன், யூத மதத்தை

தழுவிய பிறகே நீ மரணிக்க வேண்டும், ஏனெனில் யூத மதமே அனைத்தையும் விட மிகச் சிறந்த மதமாகும். (அத்தஸ்கிரா லில் குர்துபி, பக்கம் 38, தாருல் குதுபுல் இல்மிய்யா, பேரூத்)

## மரண அவஸ்தையின் ஒரு துளி

இனிய இஸ்லாமிய சகோதரர்களே! உண்மையில் மிகப் பயங்கரமான நிலைமையாகும். ஒருவருக்கு காய்ச்சலோ அல்லது கடுமையான தலைவலியோ இருக்கும்போது தெளிவான ஒரு முடிவை எடுப்பதற்கு தடுமாற்றம் ஏற்படும். அதைவிட மரண அவஸ்தைகள் என்பது மிகக் கடுமையானவை. “ஷரஹுஸ் ஸுதூரில்” குறிப்பிடப்பட்டுள்ளது: மரண அவஸ்தைகளின் ஒரு துளி வானம், பூமியில் வாழ்பவைகள் மீது போடப்படுமேயானால் அவை அனைத்தும் இறந்து விடும். (ஷரஹுஸ் ஸுதூர், பக்கம் 32, தாருல் குதுபுல் இல்மிய்யா, பேரூத்) அப்படியானால், இப்படியான ஓர் இக்கட்டான நிலைமையில், ஷைத்தான் மரணித்துக் கொண்டிருப்பவரின் **தாய், தந்தையின் வடிவில்** வந்து அவரை வழி கெடுப்பானேயானால், இஸ்லாத்தில் உறுதியாக நிலை கொண்டிருப்பதென்பது எவ்வளவு கடுமையாக இருக்கும். “கீம்யாஏ ஸஆதத்தில்” அறிவிக்கப்பட்டுள்ளது, ஹழ்ரத் ஸய்யிதுனா அபூதர்தா رَضِيَ اللهُ تَعَالٰى عَنْهُ அவர்கள் கூறுவார்கள்: அல்லாஹ் عَزَّوَجَلَّ வின் மீது ஆணையாக! ஒருவர் மரணிக்கும் நேரத்தில் அவர் இஸ்லாத்தில் மரணிப்பாரா, இல்லையா என்பதை யாராலும் கூற முடியாது. (கீம்யாஏ ஸஆதத், பாகம் 2, பக்கம் 825)

மரணத்தருவாயில் யா ரஸூலல்லாஹ் என்றேன்
கப்ரில் சென்று பார்த்தபோது தாங்களே இருந்தீர்கள்

صَلُّوْا عَلَى الْحَبِيْب        صَلَّى اللهُ تَعَالٰى عَلٰى مُحَمَّد



www.dawateislami.net

## நண்பர்களின் வடிவில் ஷைத்தான்

ஹுஜ்ஜதுல் இஸ்லாம் ஹழ்ரத் ஸய்யிதுனா இமாம் முஹம்மத் கzஸ்ஸாலி رَحْمَةُ اللهِ تَعَالٰى عَلَيْه அவர்கள் கூறியுள்ளார்கள்: மரண வேளையின் போது ஷைத்தான் அவனது பரிவாரங்களோடு மரணிப்பவரின் நண்பர்களைப் போலும், உறவினர்களைப் போலும் உருவெடுத்து வருவான். அவர்கள் எல்லோரும் அவனிடம், சகோதரரே! நாங்கள் அனைவரும் உனக்கு முன்னர் மரணத்தை சந்தித்தவர்கள். மரணத்துக்குப் பிறகு என்ன நடக்கும் என்பது எங்களுக்கு நன்றாகத் தெரியும். இப்போது உனது தருணம் வந்திருக்கிறது. நாம் எல்லோரும் உனக்கு ஒரு பணிவான வேண்டுகோளை விடுக்கிறோம், அதாவது நீ யூத மதத்தை தழுவிக்கொள், ஏனெனில் அது மாத்திரமே அல்லாஹுதஆலாவிடத்தில் சத்திய மார்க்கமாக உள்ளது என கூறுவார்கள். மரணித்துக் கொண்டிருக்கும் அந்த மனிதர் அதனை ஏற்றுக்கொள்ளாமல் விட்டு விட்டால், இந்த ஷைத்தான்கள் வேறு நண்பர்களைப் போல் தோற்றம் அமைத்து, நீ கிறிஸ்தவ மதத்தைத் தழுவிக்கொள், ஏனெனில் அதுவே (ஹழ்ரத்) மூஸா (عَلَيْهِ السَّلَام) வின் மார்க்கத்தை இரத்து செய்த மார்க்கமாகும் என வேண்டுகோள் விடுப்பார்கள். இவ்வாறு பல ஷைத்தானின் குழுக்கள் வெவ்வேறு நண்பர்கள் மற்றும் உறவினர்களின் வடிவில் பிழையான மார்க்கங்களை (நம்பிக்கைகளை) பின்பற்றும்படி வேண்டுகோள் விடுப்பார்கள். ஆகவே, உண்மையிலிருந்து திரும்பி வேறொரு பொய்யான மார்க்கத்தைப் பின்பற்ற வேண்டுமென எவருடைய விதியில் எழுதப்பட்டுள்ளதோ அவர் இஸ்லாத்தை கைவிட்டு விடுவார். (அத்துர்ரதுல் ∴பாகிரா ∴பீ கஷ்பி உலூமில் ஆகிரா, பக்கம் 511, மஜ்மூஆ ரஸாஇலுல் இமாமில் கஸ்ஸாலி, தாருல் ∴பிக்ர், பேரூத்)

**வேறு யாரிடமும் நமக்கென்ன வேலை**
**வேறு யாரிடமும் நமக்கென்ன தேவை**



www.dawateislami.net

நமக்கு நமது எஜமானிடத்தில் தேவையுள்ளது
அங்கும் செல்ல வில்லை இங்கும் செல்ல வில்லை

## எங்களுக்கு என்ன நடக்கும்?

எங்கள் மீது அல்லாஹ் عَزَّوَجَلَّ கருணை செய்வானாக. மரண வேளையின் போது, எங்களுக்கு என்ன நடக்குமென்பது எங்களுக்குத் தெரியாது! ஆஹ்! நாங்கள் ஏராளமான பாவங்களை செய்துள்ளோம். எங்களிடம் எந்த நற்செயல்களும் இல்லையே! யா அல்லாஹ்! عَزَّوَجَلَّ எங்கள் மரண வேளையின் போது ஷைத்தான்கள் நம்மிடம் வந்து விடாமல், ஈருலக அருளாளர் பெருமானார் صَلَّى اللهُ تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்கள் வருகை தரவேண்டும் என துஆ கேட்போமாக.

ஸகராத்தின்போது அண்ணலின் தரிசனம் தருவாய்
உனக்கேது இழப்பு மகிழ்வாய் மடிவேன் இறைவா

## நாவை கட்டுப்பாட்டில் வைத்திருங்கள்

இனிய இஸ்லாமிய சகோதரர்களே! அல்லாஹ் عَزَّوَجَلَّ வின் தேவையற்ற தன்மையையும், அவனது மறைவான திட்டத்தை யும் நினைத்து ஒவ்வொரு முஸ்லிமும் அச்சங்கொள்ள வேண்டும். எந்த தீயச்செயல் அல்லாஹ் عَزَّوَجَلَّ வின் பெருங்கோபத்திற்கு காரணமாகி, எங்களின் ஈமானைப் பேராபத்தில் ஆக்கி விடுமென்பது நமக்குத் தெரியாது. நாம் எப்போதும் அல்லாஹ் عَزَّوَجَلَّ வுக்கு முன் பணிவோடு இருக்க வேண்டும். **நாவை கட்டுப்பாட்டில் வைத்திருக்க** வேண்டும். ஏனெனில் அதிகமாக பேசுவதால் சில சமயம் கு.ஃப்ருடைய வார்த்தைகள் நம்மை அறியாமலே வெளியாகி விடக்கூடும். எனவே எப்போதும் ஈமானை பாதுகாப்பதற்காக கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகும்.

அ.ஃ.லா ஹழ்ரத் இமாம் அஹ்மத் ரzஸா கான் رَحْمَةُ اللّٰهِ تَعَالٰى عَلَيْه அவர்கள், சங்கையான உலமாக்கள் கூறியதாக அறிவிக்கின்றார்கள்: யாருக்கு (வாழ்நாளில்) தனது ஈமான் பறிபோவதைப்பற்றிய பயமில்லையோ, அவருடைய மரண வேளையில் ஈமான் பறிபோகும் வாய்ப்பு அதிகமாக உள்ளது. (அல் மல்.ஃ.பூள், பாகம் 4, பக்கம் 390)

## நல்ல முடிவுக்கான மதனி முத்துக்கள்

இனிய இஸ்லாமிய சகோதரர்களே! கைசேதம்.... கைசேதம்.... மிகவும் கவலைக்குரிய விடயம் என்னவென்றால், எங்களைப் பற்றிய அல்லாஹ் عَزَّوَجَلَّ வின் மறைவான திட்டம் என்ன வென்பதோ அல்லது எங்களின் முடிவு என்னவாக இருக்கும் என்பதோ எங்களுக்குத் தெரியாது! ஹுஜ்ஜதுல் இஸ்லாம் ஹழ்ரத் ஸய்யிதுனா இமாம் முஹம்மத் கzஸ்ஸாலி رَحْمَةُ اللّٰهِ تَعَالٰى عَلَيْه அவர்கள் கூறியுள்ளார்கள்: கெட்ட முடிவிலிருந்து நிம்மதியை நீ விரும்புவாயானால், தனது வாழ்நாள் முழுவதையும் அல்லாஹ் عَزَّوَجَلَّ வுக்கு அடிபணிந்து நடப்பதில் செலவிடு, மேலும் ஒவ்வொரு பாவத்தை விட்டும் ஒதுங்கிக்கொள், ஒரு ஆரி.ஃ.பீனின் பயத்தைப் போன்று உனக்கு பயம் இருக்க வேண்டும். ஏனெனில், அதன் காரணத்தால் நீ அதிகமதிகம் அழுது, சதாவும் கவலையோடு இருக்க முடியும். மேலும் அவர்கள் رَحْمَةُ اللّٰهِ تَعَالٰى عَلَيْه கூறுகிறார்கள்: நல்ல முடிவைப் பெறுவதற்காக நீ முயற்சி செய்துக் கொண்டே இருக்க வேண்டும். எப்போதும் அல்லாஹ்வின் திக்ரில் மூழ்கியவராகவும், துன்யாவின் நேசத்தை இதயத்திலிருந்து நீக்கி, பாவங்களை விட்டும் தனது உருப்புக்களை மட்டுமன்றி, உள்ளத்தையும் கூட பாதுகாப்பதுடன், இயன்றளவு தீயவர்களை பார்ப்பதைக்கூட தவிர்த்துக் கொள்ள வேண்டும்.



www.dawateislami.net

ஏனெனில் இதனால் உள்ளம் பாதிப்படைவதோடு உங்கள் சிந்தனையும் அதன் பக்கம் திரும்பி விடக்கூடும். (இஹ்யாஉல் உலூம், பாகம் 4, பக்கம் 219 - 221, முலக்கஸ் தார் ஸாதிர், பேரூத்)

முஸ்லிமானேன் அத்தார் உனது கொடையால்
ஈமானுடன் மரணம் வேண்டும் இலாஹி

## ஈமானோடு மரணிப்பதற்கு நான்கு அவ்ராத்கள்

ஒருமுறை ஒரு மனிதர் அஃலா ஹழ்ரத் رَحْمَةُ اللهِ تَعَالٰی عَلَيْه அவர்களின் சங்கை மிகுந்த சன்னிதானத்துக்கு வருகை தந்து, ஈமானோடு மரணிப்பதற்கு துஆ செய்யும்படி அவர்களிடம் வேண்டிக்கொண்டார். அப்போது அஃலா ஹழ்ரத் رَحْمَةُ اللهِ تَعَالٰی عَلَيْه அவர்கள் துஆ செய்துவிட்டு, கூறினார்கள்:

1. (தினமும்) காலையில் 41 தடவைகள் يَاحَيُّ يَاقَيُّوْمُ لَآ اِلٰهَ اِلَّآ اَنْتَ என்று ஓதவும். (பொருள்: **என்றும் உயிரோடிருப்பவனே, என்றும் நேமமாக இருப்பவனே, வணக்கத்திற்குரிய நாயன் உன்னைத்தவிர வேறு யாருமில்லை)** ஆரம்பத்திலும் கடைசியிலும் ஸலவாத் ஓதிக்கொள்ளவும்.

2. படுக்கைக்குச் செல்லும்போது, எல்லா ஓதல்களையும் ஓதிய பின் தினமும் சூரா காஃபிரூனை ஓதிக்கொள்ளுங்கள். அதன் பின் யாருடனும் பேசாமல் உறங்கி விடுங்கள். அப்படி பேசவேண்டிய தேவை ஏற்பட்டு விட்டால், மீண்டும் சூரா காஃபிரூனை ஓதிக்கொள்ளுங்கள். اِنْ شَآءَاللهُ عَزَّوَجَلَّ நீங்கள் ஈமானோடு மரணிப்பீர்கள்.

3. காலையும் மாலையும் மூன்று மூன்று முறை இந்த துஆவை ஓதிக்கொள்ளுங்கள்.

اَللّٰهُمَّ اِنَّا نَعُوْذُ بِكَ مِنْ اَنْ نُّشْرِكَ بِكَ شَيْئًا نَّعْلَمُهٗ وَ نَسْتَغْفِرُكَ لِمَا لَا نَعْلَمُهٗ

**(பொருள்: யா அல்லாஹ் عَزَّوَجَلَّ! அறிந்துக்கொண்டே உனக்கு இணை வைப்பதை விட்டும் பாதுகாப்பு தேடுகிறோம். இன்னும் அறியாமல் செய்தவைகளுக்காக நாம் உன்னிடம் மன்னிப்புக் கோருகிறோம்)** (அல் மல்ஃபூள், பாகம் 2, பக்கம் 234)

4. காலையிலும் மாலையிலும் மூன்று மூன்று முறை இதனை ஓதிக் கொள்ளுங்கள். உங்களுடைய மார்க்கம், ஈமான், உயிர், செல்வம், குடும்பம் அனைத்தும் பாதுகாப்பாக இருக்கும்.

بِسْمِ اللّٰهِ عَلٰى دِيْنِىْ بِسْمِ اللّٰهِ عَلٰى نَفْسِىْ وَوُلْدِىْ وَاَهْلِىْ وَمَالِىْ

**(பொருள்: அல்லாஹ்வின் திருநாமத்தின் பரகத்தால் என் மார்க்கம், என் உயிர், என் பிள்ளைகள், என் குடும்பம் இன்னும் என் செல்வம் பாதுகாப்பாக இருக்கட்டும்)** (ஷஜரா காதிரிய்யா ரzஸவிய்யா, பக்கம் 12, மக்தபதுல் மதீனா, பாபுல் மதீனா - கராச்சி)

**(சூரியன் மறைந்ததிலிருந்து ஸுபஹ் சாதிக் வரை இரவு இன்னும் நள்ளிரவிலிருந்து சூரியனின் முதல் கதிர் தோன்றும் வரை ஸுபஹ்)**

## நெருப்புப் பெட்டிகள்

இனிய இஸ்லாமிய சகோதரர்களே! குஃப்ருடைய நிலையில் மரணித்துவிடும் துரதிர்ஷ்டசாலியான ஒருவனை அவனது விலா எலும்புகள் ஒன்றோடொன்று சொருகிக் கொள்ளும் அளவுக்கு கப்ர் நெருக்கும். காஃபிர்களுக்கு இன்னும் பலவகையான வேதனைகள் உள்ளன. ஐம்பதாயிரம் வருடங்களுடைய கியாமத்தின் அந்த நாள் மிகவும் கடுமையான முறையில் கழியும். பின்பு அவர்கள் தலைக்கீழாக இழுத்து செல்லப்பட்டு

நரகில் வீசி எறியப்படுவார்கள். பாவத்தின் காரணமாக நரகிற்கு சென்ற முஸ்லிம்களை, நரகத்தை விட்டும் வெளியேற்றப்பட்டதன் பின் கு.ஃப்ரோடு மரணித்தவர்கள் மாத்திரம் நரகில் தங்கி விடுவார்கள். பின்பு இறுதியாக கா.ஃபிர்களுக்கு அவர்களது அளவிற்கேற்ப தீயினாலான பெட்டிகளில் அவர்களை போட்டு மூடப்படும். அது தீயால் நிரப்பப்பட்டிருக்கும். நெருப்பினாலான பூட்டு அந்தப் பெட்டிகளுக்குப் போடப்படும். இந்த நெருப்பினா லான பெட்டியை இன்னுமொரு நெருப்பினாலான பெட்டியினுள் வைக்கப்படும். இரண்டு பெட்டிகளின் இடைவெளியில் தீ மூட்டப் பட்டு, மீண்டும் நெருப்பினாலான பூட்டு அதற்கு மேல் போடப்படும். பின்பு அதனை இன்னுமொரு தீயினாலான பெட்டிக்குள் வைக்கப்பட்டு மேலும் ஒரு தீயினாலான பூட்டுப் போடப்படும். பின்பு மரணத்தை ஒரு செம்மறி ஆட்டின் வடிவில் கொண்டுவரப்பட்டு சுவர்க்கத்துக்கும் நரகத்துக்கும் இடையில் வைத்து அறுக்கப்பட்டு விடும். அதன் பின் யாருக்கும் ஒரு போதும் மரணம் வரமாட்டாது. சுவனத்திலிருக்கும் எல்லோரும் நேமமாக சுவனத்தில் வாழ்வார்கள். நரகத்திலிருக்கும் எல்லோரும் நேமமாக நரகத்தில் இருப்பார்கள். சுவனத்திலிருக் கும் மக்கள் முழுமையான மகிழ்ச்சியோடும் நரகத்திலிருக்கும் மக்கள் முழுமையான துக்கத்தோடும் வாழ்வார்கள். (பஹாரெ ஷரீஅத், பாகம் 1, பக்கம் 77,91,92, முலக்கஸ் மக்தபதுல் மதீனா, பாபுல் மதீனா – கராச்சி)

முஸ்த.ஃபாவின் நாயனே! صَلَّى اللّٰہ تَعَالٰی عَلَیْہِ وَاٰلِہٖ وَسَلَّم நாம் உன்னிடம் ஈமானோடும், ஆ.ஃபியத்தோடும் மதீனாவில் ஷஹீதாகி, ஜன்னதுல் பகீ.ஃயில் அடக்கம் பெற்று, ஜன்னதுல் பிர்தௌஸிலே உன்னுடைய மதனி ஹபீப் صَلَّى اللّٰہ تَعَالٰی عَلَیْہِ وَاٰلِہٖ وَسَلَّم அன்னவர்களின் அயல்வீட்டாளனாக இருக்கும் பாக்கியத்தை வேண்டுகிறோம்.

இனிய இஸ்லாமிய சகோதரர்களே! அல்லாஹ் عَزَّوَجَلَّ வுடைய ரஹ்மத்தின் மீது நம்பிக்கை இழந்து விடாதீர்கள். **த.ஃவதே இஸ்லாமி**யின் **மதனி கா.ஃபிலா**க்களில் பிரயாணம் செய்வீர்களே



www.dawateislami.net

யானால் اِنْ شَآءَاللّٰه عَزَّوَجَلَّ ஈமானைப் பாதுகாக்கும் மனப்பக்குவம் ஏற்படும். அப்படி மனப்பக்குவம் ஏற்படுமேயானால், கவலை உண்டாகி நீங்கள் மும்முரமாக அதில் அக்கறை காட்டி, துஆவுக்காக கைகளை உயர்த்தினால், பின்பு اِنْ شَآءَاللّٰه عَزَّوَجَلَّ கண்மணி நாயகம் صَلَّى الله تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்களின் சன்னிதானத்தில் இவ்வாறு கேட்போம்.

(தூநே இஸ்லாம் தியா தூநே ஜமாஅத்மெ லியா
தூ கரீம் அBப் கொயி ஃபிர்தாஹே இதிய்யா தேரா)

நீயே சன்மார்க்கம் தந்தாய் நீயே அரவணைத்தாய்
நீ கிருபையாளன் உன் கொடையைவிட்டு யாரும் திரும்புவார்களா?

## மாநபி ﷺ அன்னவர்களின் துஆ இறைஞ்சல்

எங்களின் ஈமானைப் பாதுகாப்பதில் மாநபி صَلَّى الله تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்கள் எந்தளவு அக்கறை காட்டினார்கள் என்பதை, உங்களின் துடித்திடும் இதயத்திலே கைகளை வைத்து கேளுங்கள்! ரூஹுல் பயான் 10ஆம் பாகம் 315ஆவது பக்கத்தில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது: ஒருமுறை மதீனத்து மாமன்னர் صَلَّى الله تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்களின் சன்னிதானத்துக்கு ஷைத்தான் ஒரு தண்ணீர் போத்தலை எடுத்துக்கொண்டு, மாறு வேடத்தில் வந்து கூறினான், மக்களின் மரண வேளையின் போது நான் இந்தத் தண்ணீர் போத்தலை அவர்களின் ஈமானுக்குப் பகரமாக விற்பனை செய்வேன். அதைக் கேட்டவுடன் மாநபி صَلَّى الله تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்கள் எந்தளவு அழுதார்கள் என்றால், அதைப் பார்த்த அன்னவர்களது பரிசுத்த குடும்பத்தினர்களும் அழத்தொடங்கி விட்டார்கள். அல்லாஹ் عَزَّوَجَلَّ வஹீ அனுப்பி வைத்தான், **என் அன்புக்குரியவரே!** தாங்கள் கவலைப்பட

வேண்டாம்! நான் தனது அடியார்களை அவர்களின் மரண வேளையின்போது ஷைத்தானுடைய சூழ்ச்சிகளை விட்டும் காப்பாற்றுகிறேன். (ரூஹுல் பயான், பாகம் 10, பக்கம் 315, கொயிடா)

**உம்மத்தின் சிந்தனையில் கவலையுற்றவர்கள் மாநபி**

**பெற்றோர்களை விடவும் கவலைப்படுபவர்கள் மாநபி**

## தாய்க்கு கண் பார்வை கிடைத்து விட்டது

அல்குர்ஆனையும், ஸுன்னத்துக்களையும் போதிக்கின்ற, அரசியல் சார்பற்ற உலகளாவிய அமைப்பான **த.்.வதே இஸ்லாமி**யின் தன்zஸீமி தஹ்ஸீல் Gகுல்ஷனே பக்தாத் (Bபாபுல் மதீனா, கராச்சி) தின் ஒரு இஸ்லாமிய சகோதரியின் வாக்கு மூலம் இதுவாகும்: அதாவது என் அருமை தாய் (வயது கிட்டதட்ட 60) தூக்கத்திலிருந்து காலையில் எழுந்தபோது, கண்களை திறந்திருந்தும் அவர்களுக்கு எதுவும் தென்படவில்லை. நாங்கள் பதற்றத்துடன் டாக்டரை தொடர்ப்பு கொண்டபோது, அவர் கூறினார், “high blood pressure” இன் காரணத்தினால் கண்ணின் ஒளி அணைந்து, கண் பார்வை சென்றுவிட்டது! பல டாக்டர்களிடம் சென்றோம் அனைவரும் நம்பிக்கை இழந்து விடுவதுபோல் பதிலளித்தனர்.

என் அருமை தாயார் மிகவும் நம்பிக்கையுடன் கூறினார்: என்னை மதனி மர்கZஸ் .்.பைஸானே மதீனாவில் நடைப் பெறும் இஸ்லாமிய சகோதரிகளின் இஜ்திமாவிற்கு அழைத்துச் செல்லுங்கள். இன்ஷா அல்லாஹ் عَزَّوَجَلَّ அங்கு எனக்கு கண் பார்வை மீளக்கிடைத்து விடும். பின்பு பிரம்மாண்டமான மதனி மர்கZஸ் .்.பைஸானே மதீனாவில் ஞாயிறு பிற்பகல் நடைப் பெறும் ஸுன்னத்துக்கள் நிறைந்த வாராந்த இஜ்திமாவிற்கு நாம் (இரண்டு சகோதரிகள்) தாயை அழைத்து வந்தோம்.

அங்கு நடைப்பெற்ற துஆ எங்களை மிகவும் அழ வைத்தது. தாயாரும் அதிகமாக அழுது கெஞ்சினார்கள். திடீரென அவர்களின் கண்களில் ஒரு பிரகாசம் தென்பட்டது. மேலும் மதனி மர்கzஸ் ஃபைஸானே மதீனாவின் தரை நன்றாக தெரிய ஆரம்பித்தது. பின்பு அப்படியே பார்த்துக்கொண்டிருந்த போது கண் பார்வை முழுமையாக கிடைத்து விட்டது.

ஸுன்னத்துக்களின் வசந்தம் வந்தது ஃபைஸானே மதீனாவில்
ரஹ்மத்தின் மேகம் சூழ்ந்தது ஃபைஸானே மதீனாவில்
நீதியில் குறைவு, பார்வையில் பலஹீனம்
வந்து துஆ கேள் சகோதரனே ஃபைஸானே மதீனாவில்
ஆபத்தில் சிக்கினால், நோயில் வீழ்ந்தால்
வந்து துஆ பெற்றிடு சகோதரனே ஃபைஸானே மதீனாவில்

صَلُّوْا عَلَى الْحَبِيْب صَلَّى اللّٰهُ تَعَالٰى عَلٰى مُحَمَّد

تُوْبُوْا اِلَى اللّٰه اَسْتَغْفِرُ اللّٰه

صَلُّوْا عَلَى الْحَبِيْب صَلَّى اللّٰهُ تَعَالٰى عَلٰى مُحَمَّد

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ وَالصَّلٰوةُ وَالسَّلَامُ عَلٰى سَيِّدِ الْمُرْسَلِيْنَ
اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ ؕ بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ؕ

# நித்திரை விட்டெழுதலும், தூங்குதலும்: 15 மதனி முத்துக்கள்

1. நித்திரைக்குச் செல்லும் முன் படுக்கையை சரி செய்து சுத்தப்படுத்துங்கள். இதனால் சிறுபூச்சிகள் அகற்றப் படுகின்றன.

2. நித்திரைக்குச் செல்லும் முன் இந்த துஆவை ஓதுங்கள்:

اَللّٰهُمَّ بِاسْمِكَ اَمُوْتُ وَاَحْيٰي

**யா அல்லாஹ் عَزَّوَجَلَّ நான் மரணிப்பதும், வாழ்வதும் உன்னுடைய திருநாமத்தாலேயே ஆகும். (அதாவது தூங்குவதும், எழுவதும்)**

(புகாரி, பாகம் 4, பக்கம் 196, ஹதீஸ் 6325)

3. அறிவாற்றலை இழக்க நேரிடும் என்ற அச்சம் நிலவுவதால் அஸருக்குப் பின் நித்திரை கொள்ள வேண்டாம். **நபி பெருமானார்** صَلَّى اللّٰهُ تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்கள் கூறினார்கள்: “ஒருவர் அஸருக்குப் பின்னர் நித்திரை கொண்டு தன் அறிவாற்றலை இழந்து விடுவாரேயானால் அவர் தன்னைத் தானே நொந்துக் கொள்ளட்டும்”.

(முஸ்னத் அபீ ய.்.லா, பாகம் 4, பக்கம் 278, ஹதீஸ் 4897)

4. பகல் காலத்தில் சிறிது நேரம் ஓய்வெடுப்பது (அதாவது கைலூலா) முஸ்தஹப் ஆகும்.

(ஆலம்கீரி, பாகம் 5, பக்கம் 376)

ஃபிக்ஹு கலையின் மாமேதை, ஆத்மீகத்தின் வழி காட்டும் விளக்கு ஹழ்ரத் அம்ஜத் அலி அஃzஸமி رَحْمَةُ اللهِ تَعَالٰى عَلَيْه அவர்கள் கூறுகிறார்கள்: “இது குறிப்பாக இரவு கால தொழுகையை நிறை வேற்றுபவர்களுக்காகவும், அல்லாஹ் عَزَّوَجَلَّ வை திக்ர் செய்பவர்களுக்காகவும், மார்க்க ஞான நூல்களில் ஆழ்ந்திருப்பவர்களுக்காகவும், இரவு விழித்திருப்பவர்களுக்குமாகும். இதனால் இரவு விழித்திருந்ததால் இழந்த சக்தியை மீள அடைந்துக் கொள்ளலாம்.

(பஹாரே ஷரீஅத், பாகம் 16, பக்கம் 79 – மக்தபதுல் மதீனா)

5. நாளின் தொடக்கத்தில் அல்லது மஃரிபுக்கும், இஷாவுக்கு மிடையில் நித்திரைக் கொள்வது மக்ரூஹ் ஆகும்.

(ஆலம்கீரி, பாகம் 5, பக்கம் 376)

6. தூய்மையான நிலையில் நித்திரைக் கொள்வது முஸ்தஹப் ஆகும்.

7. வலது பக்கமாகத் திரும்பி தனது வலது கையை தனது வலது கன்னத்தில் வைத்தவராக கிப்லாவை முன்னோக்கி சிறிது நேரம் படுத்துவிட்டு பிறகு இடது புறமாகத் திரும்பி நித்திரைக் கொள்ளலாம். (ஆலம்கீரி, பாகம் 5, பக்கம் 376)

8. நித்திரை கொள்ளும்போது கப்ரை நினையுங்கள். ஏனெனில் அந்த கப்ரில் நாங்கள் தனித்து விடுவோம். அங்கு எங்களுடன் எங்களுடைய அமல்களைத் தவிர வேறு எதுவும் இருக்கமாட்டாது.



www.dawateislami.net

9. நித்திரை கொள்ளும் வரை سُبْحٰنَ اللّٰهِ, لَآاِلٰهَ اِلَّااللّٰهُ என்றோ அல்லது اَلْحَمْدُ لِلّٰهِ என்றோ தஸ்பீஹ் ஓதுங்கள். ஏனெனில் ஒருவர் எந்த நிலையிலே நித்திரையிலானாரோ அந்த நிலையிலேயே அவர் எழும்புவார். எந்த நிலையிலே ஒருவர் மரணித்தாரோ அந்த நிலையிலேயே அவர் இறுதித் தீர்ப்பு நாளில் எழுப்பப்படுவார்.

(ஆலம்கீரி, பாகம் 5, பக்கம் 376)

10. நித்திரையை விட்டு எழுந்தவுடன் இந்த துஆவை ஓதுங்கள்.

اَلْحَمْدُ لِلّٰهِ الَّذِىْٓ اَحْيَانَا بَعْدَ مَآ اَمَاتَنَا وَاِلَيْهِ النُّشُوْرُ

**தர்ஜுமா: அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும். அவனே மரணத்திற்குப் பின் வாழ்வைத் தந்தான். அவனிடமே நாங்கள் மீளுவோம்.**

(புகாரி, பாகம் 4, பக்கம் 196, ஹதீஸ் 6325)

11. எழுந்தவுடன் மற்றவர்களைத் தொந்தரவு செய்யாமல் தக்வாவை கைக்கொள்ளப் போவதாக திடமாக எண்ணம் கொள்ளுங்கள்.

12. ஆண் அல்லது பெண் குழந்தைகள் பத்து வயதை அடைந்தவுடன் அவர்கள் தனித்தனியாக படுக்க வேண்டும். இதே வயதை உடைய ஆண் பிள்ளை அதே வயதையுடைய ஆண் பிள்ளையுடனோ அல்லது பெரிய ஆண்களுடனோ படுக்கக்கூடாது.

(துர்ரெ முக்தார், ரத்துல் முஹ்தார் பாகம் 9, பக்கம் 629)

13. கணவனும், மனைவியும் ஒரே படுக்கையில் படுக்கும் போது பத்து வயதுடைய அல்லது அதற்கு மேல் வயதுள்ள பிள்ளைகளை தங்களோடு படுக்க வைத்துக் கொள்ளக்கூடாது. ஓர் ஆண் பிள்ளை பாலுணர்வுகளைப் பெறும் முதிர்வினை அடையும்போது வளர்ந்த ஆண்களுக்குரிய அதே சட்டவிதிகள் தான் இவருக்கும் உண்டாகிறது.

(துர்ரெ முக்தார் பாகம் 9, பக்கம் 630)

14. நித்திரை விட்டெழுந்தவுடன் மிஸ்வாக் செய்து கொள்ளுங்கள்.

15. இரவில் எழுந்து தஹஜ்ஜுத் தொழுது கொள்ளுங்கள். அப்படிச் செய்வது மிக்க நன்மையை அளிக்கும். கருணை மிகுந்த நபி صَلَّى اللّٰهُ تَعَالٰی عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்கள் கூறினார்கள்: “பர்ழான ஐந்து நேரத் தொழுகைக்குப் பிறகு மிகச் சிறந்த தொழுகை தஹஜ்ஜுத் தொழுகையாகும்.”

(ஸஹீஹ் முஸ்லிம், பக்கம் 591, ஹதீஸ் 1163)

صَلُّوْا عَلَى الْحَبِيْب　صَلَّى اللّٰهُ تَعَالٰى عَلٰى مُحَمَّد

تُوْبُوْا اِلَى اللّٰه　اَسْتَغْفِرُ اللّٰه

صَلُّوْا عَلَى الْحَبِيْب　صَلَّى اللّٰهُ تَعَالٰى عَلٰى مُحَمَّد



www.dawateislami.net

# பொருளடக்கம்

புத்தகம் வாசிக்கும்போது ஓதும் துஆ ........ ii

## கெட்ட முடிவுக்கான காரணங்கள்............... 1

ஸலவாத் ஓதாததன் விபரீதம் ........ 1

கனவுகளைக் கொண்டு யாரையும் கா.்.பிர் என கூறிவிட முடியாது ........ 2

ஸலவாத்துக்குப் பதிலாக ص என்று எழுதுவதற்கு அனுமதி இல்லை........ 2

சலுகையின் பலனை அடைந்துக் கொள்ளுங்கள் ........ 3

கெட்ட முடிவுக்கு நான்கு காரணங்கள்........ 4

தரித்திரம் ஏற்படுத்திய மூன்று குறைகளின் சம்பவம் ........ 6

மறுமையில் நாயின் உருவம் ........ 8

கோளின் வரைவிலக்கணம்........ 8

கோள் மூட்டலை விட்டும் நாம் விலகிக் கொள்கிறோமா? ........ 9

பொறாமையின் வரைவிலக்கணம்........ 11

இலகுவான வார்த்தைகளில் பொறாமை என்பதன் சுருக்கம்........ 11

ஸய்யிதி குதுபே மதீனாவின் சம்பவம்........ 12

தாடி இல்லாத இளைஞரை விரும்பிய முஅத்தின் இருவரின் அழிவு........ 13

உறவினர் மீது உறவினரின் பர்தா (முகத்திரை) ........ 15

ஓர் அம்ரதை இச்சையோடு பார்ப்பது ஹராமாகும்........ 15

அம்ரதோடு எழுபது ஷைத்தான்........ 16

ஹஜ்ஜை நிறைவேற்றாமல் இருப்பதும் கெட்ட முடிவுக்கு காரணமாகும்........ 17

அதானின் போது பேசுபவரின் முடிவு கெட்டதாக அமையும் அச்சமுள்ளது ............ 17
அதானுக்கு பதிலளித்தவர் சுவனவாதி ஆனார் ............ 18
நெருப்பு வேகமாக நெருங்குகிறது ............ 19
அளவு, நிறுவையின் மோசடிக்கு தண்டனை ............ 20
ஒரு ஷேகின் கெட்ட முடிவு ............ 20
மலக்குகளின் முன்னைய உஸ்தாத் ............ 21
பெற்றோரின் வடிவில் ஷைத்தான் ............ 21
மரண அவஸ்தையின் ஒரு துளி ............ 22
நண்பர்களின் வடிவில் ஷைத்தான் ............ 23
எங்களுக்கு என்ன நடக்கும்? ............ 24
நாவை கட்டுப்பாட்டில் வைத்திருங்கள் ............ 24
நல்ல முடிவுக்கான மதனி முத்துக்கள் ............ 25
ஈமானோடு மரணிப்பதற்கு நான்கு அவ்ராத்கள் ............ 26
நெருப்புப் பெட்டிகள் ............ 27
மாநபி صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّم அன்னவர்களின் துஆ இறைஞ்சல் ............ 29
தாய்க்கு கண் பார்வை கிடைத்து விட்டது ............ 30
நித்திரை விட்டெழுதலும், தூங்குதலும்: 15 மதனி முத்துக்கள் ............ 32

# Maktaba-tul-Madina

**UK:** 80-82 Bordesley Green Road, Birmingham, B9 4TA.
Contact #: 07989996380 - 07867860092
Email: uk@dawateislami.net

**USA:** Faizan-e-Madina, P. O. Box 36216, Houston, Tx 77274.
Contact #: +713-459-1581, 832-618-5101

**INDIA:** 19/20 Muhammad Ali Road, Opposite Mandvi Post Office
Mumbai - 400 003.
Contact #: +91-022-23454429

**BANGLADESH:** K.M Bhovan, 1st Floor, 11, Andar Killa Chittagong.

**HONG KONG:** Faizan-e-Madina, M/F-75, Ho Pui Street, Tsuen Wan N.T.
Contact #: +85-98750884 – 31451557

**SOUTH AFRICA:** 61A, Mint Road, Fordsburg, Johannesburg.
Contact #: 011-838 9099

**KENYA:** Kanz-ul-Iman, Near Al-Farooq Hospital, Tonoka Area Mvita, Mombasa.
Contact #: +254-721-521916

**TORONTO CANADA:** 1060 Britannia Road Unit 20, 21 Mississauga ONT Canada.
Contact #: +141-664-82261

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ وَالصَّلٰوةُ وَالسَّلَامُ عَلٰى سَيِّدِ الْمُرْسَلِيْنَ اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

# ஸுன்னத்துக்களின் வசந்தங்கள்

அல்ஹம்துலில்லாஹ் عَزَّوَجَلَّ அல்-குர்ஆனையும் சுன்னத்துக்களையும் போதிக்கின்ற அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாஅத்தின் அரசியல் சார்பற்ற உலகளாவிய அமைப்பான "த'வதே இஸ்லாமி" யின் நறுமணம் கமழும் மதனீ சூழலில் அதிகமான சுன்னத்துக்களை கற்றுக்கொள்ள, கற்றுக்கொடுக்கப்படுகின்றன. ஒவ்வொரு வியாழக்கிழமை பின்னேரமும் இல. 10, பௌன்ஜா வீதி, கொழும்பு 12 இல் அமைந்துள்ள ஃபைஸானே மதீனாவில் ம'ரிப் தொழுகையை தொடர்ந்து நடைபெறுகின்ற ஸுன்னத்துக்கள் நிறைந்த இஜ்திமாவில் ஆரம்பம் முதல் இறுதிவரை கலந்துகொண்டு அதிகமாக நன்மைகளை பெற்றுக்கொள்ளுங்கள்.

மேலும் ரஸூலுல்லாஹ் صَلَّى اللّٰهُ تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அவர்களின் நேசர்களுடன் மதனீ கா'பிலாக்களில் ஸுன்னத்துக்களை கற்றுக்கொள்ள பிரயாணம் செய்யுங்கள். நீங்கள் நல்லொழுக்கமுள்ள முஸ்லிம்களாக மாறுவதற்காக வேண்டி "மக்தபதுல் மதீனா" எனும் த'வதே இஸ்லாமியின் நூல் நிலையத்திலிருந்து "மதனீ இன்ஆமாத்" எனும் புக்லெட்டை, ஒவ்வொரு இஸ்லாமிய மாத ஆரம்பத்திலும் பெற்று அதன் பிரகாரம் அமல் செய்து தினமும் ஃபிக்ரே மதீனா (அமல்களின் மீது கண்ணோட்டம்) செய்வதோடு அதனை நிரப்பி ஒவ்வொரு இஸ்லாமிய மாத முடிவிலும் அதனை உங்கள் பிரதேச த'வதே இஸ்லாமியின் பொறுப்புதாரியிடம் ஒப்படைத்து வாருங்கள். இன்ஷா அல்லாஹ் இதனுடைய பரக்கத்தை கொண்டு ஃபர்ளுகள், வாஜிபுகள் மற்றும் ஸுன்னத்துக்களை பேணி நடக்கவும், பாவமான காரியங்களை வெறுத்தொதுக்கவும் ஈமானை பாதுகாத்து உறுதிப்படுத்தவும் உற்சாகமும் உறுதியும் ஏற்படுவதை காணலாம்.

ஒவ்வொரு இஸ்லாமிய சகோதரர்களும் **"நான் என்னையும், உலக மக்கள் அனைவரையும் சீர்திருத்த முயற்சி செய்வேன்"** இன்ஷா அல்லாஹ் عَزَّوَجَلَّ! எனும் மதனீ (நன்) நோக்கத்தை தன்னுடைய நோக்கமாக ஆக்கிக்கொள்ள வேண்டும். தனது சீர்திருத்தத்திற்காக "மதனீ இன்ஆமாத்" பிரகாரம் அமல் செய்வதன் மூலமும் உலக மக்களின் சீர்திருத்தத்திற்காக "மதனீ கா'பிலாவில் பிரயாணம் செய்வதன் மூலமும் மேற்குறித்த மதனீ நோக்கத்தை பூர்த்தி செய்யலாம்.



MAKTABATUL MADINAH

Global Madani Markaz, Faizan-e-Madinah, Mahallah Saudagran
Purani Sabzi Mandi, Bab-ul-Madinah, Karachi, Pakistan
Ph: +92-21-34921389 to 93, Ext. 1262
E-mail: translation@dawateislami.net Web: www.dawateislami.net